DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC-160/2023
Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆறுமுகம் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

14.12.2023

<u>முதல் விசாரணை</u>

1. நான் முஸ்டக்குறிச்சியில் வசித்து வருகிறேன். எனது ஆதார் அட்டை ம.சா.ஆ.1 ஆகும். நான் கமுதியில் வாடகை வாகனங்களை வைத்து தொழில் செய்து வருகிறேன். மேலும் பலர் வாகனங்களை வைத்து தொழில் செய்து வருகிறார்கள். அதில் சிலர் சட்டவிரோதமாக Own board வாகனங்களை வைத்து வாடகைக்கு ஓட்டி வந்தார்கள்.

2. அதனால் கமுதி காவல்நிலையத்தில் 1வது எதிரியிடம் புகார் செய்தேன். ஆனால் 1வது எதிரி நான் புகார் அளித்த நபர்களுடன் ஒன்று சேர்ந்து கொண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. கடந்த 21.01.2015ம் தேதி எனது சகோதரர் மாரிமுத்து இது சம்பந்தமாக இராமநாதபுரம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு புகார் அளித்தார்.

3. இதை அறிந்த 1வது எதிரி எனக்கு எதிராகவே எங்கள் உயர் அதிகாரிகிட்ட புகார் கொடுக்கிறியா, நீ எப்படி இந்த தொழிலை நடத்துகிறாய் என்று பார்ப்போம் என மிரட்டி விட்டுச் சென்றார்.

4. கடந்த 01.10.2014ம் தேதி காளியம்மாள் என்பவரை அடையாளம் தெரியாத மர்மநபர்கள் கொலை செய்ததாக அவரது மருமகள் அளித்த புகாரின் அடிப்படையில் குற்ற எண். 232/2014 இ.த.ச பிரிவுகள் 392, 302 இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட அந்த வழக்கில் காளியம்மாளின் மூத்த மகன் மாரிமுத்து 1வது எதிரியாக சேர்க்கப்பட்டார்.

5. 1வது எதிரி இந்த வழக்கை காரணமாக வைத்து என்னை பழி வாங்க வேண்டும் என்று கெட்ட எண்ணத்துடன் சம்பவம் நடந்து 8 மாதங்களுக்கு பிறகு என்னையும், எனது வாகனமான TN-65-Y-3129 என்ற இண்டிகா வாகனத்தை அந்த

வழக்கில் பொய்யாக சேர்த்து விட்டனர்.

6. 14.5.2015 தேதி என் வீட்டின் முன் நின்ற TN-45-AL-8906 என்ற Hero Honda Splendor NXG என்ற இருசக்கர வாகனத்தை ஒன்னு ரெண்டு எதிரிகள் சட்டவிரோதமாக சாவி இன்றி பூட்டை உடைத்து எடுக்கும்போது எனது தாயார் ஏன் எடுக்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஒன்றும் சொல்லாமல் எடுத்து சென்று விட்டார்கள்.

7. 2015 ஆம் தேதி எனது மனைவியின் அண்ணன் செந்தில்வேல் வீட்டில் நிறுத்தி இருந்த எனக்கு சொந்தமான மகேந்திரா மேக்சி கேப் என்ற TN-65C-1400 என்ற வாகனத்தையும் எனது எடுத்துச் சென்றுள்ளார்கள். எனது பெயரில் உள்ள மேற்படி இரண்டு வாகனத்திற்கான RC புக் ம.சா.ஆ.2 ஆகும்.

8. இதனை தடுக்க முயன்ற எனது மனைவியையும், மாமியாரையும் தவறான வார்த்தைகளில் திட்டியும், விரட்டியும் வண்டி எடுத்துச் சென்றுள்ளார்கள்.

9. இதனை அறிந்த எனது மனைவியின் அண்ணன் 9.8.2015 ஆம் தேதி அன்று ராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அந்த வாகனத்தை மீட்டு தருமாறும் தவறாக நடந்த எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க பதிவு தபால் மூலம் மனு அனுப்பினார்.

10. ஆனால் அந்த மனுவின் மீது எந்த விசாரணை மேற்கொள்ளவில்லை. மேற்படி வழக்கில் நான் முன்ஜாமீன் பெற்றுவிட்டேன். முன்ஜாமீன் பெற்ற பிறகு என்னுடைய 3 வாகனத்தையும் பெற வேண்டி கமுதி உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவரிடம் 15.11.2016-ம் தேதி வாகனத்தை பெற வேண்டி மனு செய்தேன். அந்த மனு ம.சா.ஆ.7 ஆகும்.

11. அந்த மனுக்கான பதில் அறிக்கை tata indica வாகனம் மற்றும் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மற்ற இரு வாகனங்கள் இந்த வழக்கில் கைப்பற்றப்படவில்லை என 1 வது எதிரி பதிலளித்திருந்தார். எதிரிகள் தரப்பில் வழங்கிய ஆட்சியேபனை ம.சா.ஆ.8 ஆகும். மேற்படி இண்டிகா காரை மட்டும் ஒப்படைக்கும்படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவு ம.சா.ஆ.9 ஆகும்.

12. அந்த உத்தரவின் படி எனது இண்டிகா வாகனத்தை பெறுவதற்காக 1 வது எதிரியிடம் அணுகிய போது வாகன கண்ணாடிகள் அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டும், கதவுகள் எல்லாம் உடைக்கப்பட்டும், அதில் உள்ள டிவி டேபிரி கார்டு உள்ளிட்ட பொருட்கள் காணாமல் போயிருந்தது.

13. நான் வாகனத்தில் நல்ல முறையில் எடுத்து சென்று விட்டு இவ்வாறு இருப்பதை எதிரிடம் கேட்டபோது நான் தான் காரை அடித்து உடைத்து நொறுக்கிறேன் கோர்ட்டு உத்தரவுப்படி வண்டியை எடுக்க வந்து விட்டாயா உன்னால் என்னை ஒன்றும் செய்ய முடியாது முடிந்தால் என் மீது வழக்கு போட்டு பாரு என மிரட்டினார்.

14. பின்னர் எனது மனைவியின் அண்ணன் எனது வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட வாகனத்தை கேட்ட பொழுது பதில் சொல்லவில்லை, நடவடிக்கை எடுக்க வேண்டி உரிய அதிகாரிக்கு மனு செய்து அந்த மனுவின் மீதான விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது.

15. கடந்த 29.12.2016ம் தேதி அன்று கமுதி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் இரண்டு வாகனங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும், அதன் முழு விவரங்களை அறியவும் மேற்படி காவல் நிலையத்திற்கு சென்று ஆய்வு செய்ய நீதிமன்றம் அனுமதி அளித்து ஆணையாளரை நியமித்தது. சோதனை பிடியாணை வேண்டி செய்யப்பட்ட மனு ம.சா.ஆ.10 ஆகும்.

16. ஆணையராக வழக்கறிஞர் எம் சேதுபதி அவர்களை நியமித்து அந்த நியமன ஆணை ம.சா.ஆ.11 ஆகும். காவல் நிலையத்தில் ஆய்வு செய்து எனக்கு சொந்தமான TN-65C-1400 என்ற மகேந்திரா மேக்சி கேப் வாகனம் அருப்புக்கோட்டை ரோட்டில் STV சேம்பர் அருகில் உள்ள கட்டிடத்தில் பின்புறத்தில் கேட்பாரற்ற நின்றதாகவும், அதன் உரிமையாளர் யார் என்று கண்டுபிடிக்க முடியாததால் அவற்றை கடந்த 12.8.2015 ஆம் தேதி 9 மணிக்கு கைப்பற்றி குற்ற எண் 215/15 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அந்த வாகனத்தை கடந்த 12.8.2016ம் தேதி நிர்வாகத்துறை நடுவரிடம் 1ம் எதிரி ஒப்படைத்து விட்டதாகவும் அதே போல் TN45-AL-8906 Splendor NXG என்ற இருசக்கர வாகனம் கமுதி சந்தப்பேட்டை அருகே இக்பால் பள்ளி அருகில் கேட்பார் என்று கிடந்த வாகனத்தை கடந்த 26.5.2015 ஆம் தேதி கைப்பற்றி குற்ற எண் 133/2015ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, கடந்த 26.5.2016 ஆம் தேதி கமுதி நிர்வாக துறை நடுவரிடம் 2ம் எதிரி ஒப்படைத்து விட்டதாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தார். அந்த ஆணையர் அறிக்கை ம.சா.ஆ.12 ஆகும். அது சம்மந்தமான நீதிமன்ற இறுதி உத்தரவு ம.சா.ஆ.13 ஆகும்.

17. இதற்கு முறையான விளக்கம் கூற 06.01.2017 ஆம் தேதி கமுதி வட்டாட்சியருக்கு நான் மனு செய்தேன். அந்த மனு ம.சா.ஆ.14 ஆகும். முதல் தகவல்

அறிக்கை என்பது காவல்துறையினர் பராமரிக்கப்படும் ஆவணம் என்பதால் கமுதி காவல்துறை ஆய்வாளரிடம் மனு செய்து நிவாரணம் தேடிக் கொள்ளலாம் என வட்டாட்சியர் 17.1.2017 ஆம் தேதி பதில் அனுப்பினார். அந்த பதில் குறிப்பானை ம.சா.ஆ.15 ஆகும்.

18. கமுதி வட்டாட்சியர் முறையான தகவல் வழங்காததால் 04.02.2017 ம் தேதி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் துணை வட்டாட்சியர் அவர்களுக்கு மனு செய்து அந்த மனு ம.சா.ஆ.16 ஆகும். மேற்படி மனுவுக்கு கமுதி துணை வட்டாட்சியர் வழங்கிய பதில் ம.சா.ஆ.17 ஆகும். அதோடு மாநில தகவல் ஆணையருக்கு மேல்முறையீடு செய்தேன்.

19. அந்த மேல் முறையீட்டை விசாரித்த மேல்முறையீட்டு ஆணையம் முறையான தகவல் வழங்காத துணை வட்டாட்சியர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கும்படி 10.05.2022–ம் தேதி உத்தரவிட்டிருந்தது.

20. மேற்படி வாகனங்களை திரும்ப பெற வேண்டி ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியருக்கு 4.5.2017 ஆம் தேதி மனு செய்தேன். அந்த மனு ம.சா.ஆ.18 ஆகும். அந்த மனுவை விசாரித்த மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும் பரமக்குடி கோட்டாட்சியருக்கும் 27.5.2017 ஆம் தேதி உத்தரவிட்டார். அந்த உத்தரவு ம.சா.ஆ.19 ஆகும்.

21. அந்த உத்தரவுக்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த 07.05.2018 தேதி கமுதி காவல்துறை ஆய்வாளர், ராமநாதபுரம் காவல்துறை கண்காணிப்பாளர், தமிழக காவல்துறை இயக்குனர் உள்துறை செயலாளர் ஆகியோருக்கு மேற்படி வாகனத்தை திரும்ப ஒப்படைக்கவும் சட்ட விரோதமாக கைப்பற்றிய எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் மனு செய்தேன். அந்த மனு ம.சா.ஆ.20 ஆகும்.

22. அந்த மனுவில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 1ம் எதிரி மீது நடவடிக்கை எடுத்தும், எதிரியால் சேதமாகி போன எனது வாகனங்களுக்கு நஷ்ட ஈடு கேட்டு writ of mandamus மனுவை தாக்கல் செய்தேன்.

23. 07.05.2018 தேதி இட்ட மனுவை முறையாக விசாரித்து 4 வாரங்களுக்குள் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு 16.10.2019 ஆம் தேதி

உத்தரவிட்டிருந்தது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவு ம.சா.ஆ.21 ஆகும். அந்த உத்தரவின்படி 9.06.2020 ஆம் தேதி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து எனக்கு சம்மன் வந்தது. அந்த சம்மன் ம.சா.ஆ.22 ஆகும். நான் அன்றைய தினம் ஆஜராகி எனது தரப்பு வாக்குமூலத்தை கொடுத்தேன். அந்த வாக்குமூலம் ம.சா.ஆ.23 ஆகும்.

24. அதை விசாரித்த ராமநாதபுரம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மனுவுக்கும் உண்மைக்கும் சம்பந்தம் இல்லாத பொய்யான காரணங்களை கூறி எனக்கு எந்தவித நிவாரணம் வழங்க இயலாது என 04.02.2021 ஆம் தேதி மறுத்து உத்தரவிட்டார். அந்த உத்தரவின் நகல் ம.சா.ஆ.24 ஆகும்.

25. நான் ஏற்கனவே கடந்த 04.02.2017 ம் தேதி கமுதி வட்டாட்சியருக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 ன் கீழ் மனு செய்ததில் அந்த மனுவிற்கு முறையான பதில் இல்லாததால் மாநில தகவல் ஆணையத்திற்கு அந்த மாநில தகவல் ஆணையம் 10.05.2022–ம் தேதி துணை வட்டாட்சியர் அவர்களுக்கு துறை ரீதியான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு இருந்தது. அந்த உத்தரவு ம.சா.ஆ.25 ஆகும். வழங்கிய உத்தரவின்படி தகவல் அலுவலர் கடந்த 06.05.2022–ம் தேதி எதிரிகள் இருவரும் மேற்படி வாகனங்களை ஒப்படைக்கவில்லை என்று எனக்கு தகவல் அனுப்பினார். அந்த தகவல் ம.சா.ஆ.26 ஆகும். இதனால் நான் மாவட்ட ஆட்சியரிடம் நேரடியாக முறையீடு செய்தேன்.

26. அந்த முறையீட்டை விசாரித்த மாவட்ட ஆட்சியர் அது சம்பந்தமாக விசாரணை நடத்தி அறிக்கை அனுப்புமாறு மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு 04.08.2022 ஆம் தேதி உத்தரவிட்டார். அந்த உத்தரவு ம.சா.ஆ.27 ஆகும்.

27. அதற்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எந்த விசாரணை மேற்கொள்ளாமல் காலம் கடத்தி வருகிறார். அதனால் 12.2.2022 ஆம் தேதி எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டி முதன்மை செயலர் அவர்களுக்கு மனு செய்தேன். அந்த மனு ம.சா.ஆ.28 ஆகும்.

28. மேற்படி எதிரிகள் மீது எவ்விதமான துறை நடவடிக்கையும் எடுக்கவில்லை. 29.6.2022–ம் தேதி நினைவூட்டல் கடிதம் அனுப்பி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த நினைவூட்டல் கடிதம் ம.சா.ஆ.29 ஆகும்.

29. மேற்படி வாகனங்களை சட்டப்படி கைப்பற்றாமல் சட்டவிரோதமாக எடுத்து

உண்மைக்கு புறம்பான தகவல்களை கூறி போலி ஆவணங்களை தயாரித்து அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் அளித்தேன். அந்த புகாரின் மீது வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுகிறேன்.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.